**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**CC.No.175/2024**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | ஜீவானந்தம்(PW2) | | |
| Father's Name | சாமியப்பன் | தொழில் | |
| Village | பெருமாநல்லூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 29 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of June 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்த தொழில் செய்து வருகிறேன். கடந்த 18.05.2023 தேதி திருமுருகன்பூண்டி மாநகராட்சி வாட்டர் டேங்க் அருகே மாலை நேரத்தில் போலீசார் வந்தார்கள். அந்த இடத்தில் நடந்த வாகன விபத்து சம்பந்தமாக அந்த இடத்தை பார்த்து படம் வரைந்து எழுதினார்கள். அதற்காக நான் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

விபத்து சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் நான்கு ஐந்து நபர்கள் இருந்திருப்பார்கள். நான் என்னுடைய கடையிலிருந்து போலீசார் என்னை அழைத்து விசாரித்தார்கள். என்னுடைய கடைக்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 10,20 அடி தூரம் இருக்கும். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியும். இந்த விபத்து குறித்து நான் காவல் நிலையம் செல்லவில்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |